**செய்தி வெளியீடு எண்: 791** **நாள்: 22.11.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

தொழிற்பயிற்சி விதிகள் (1973)ன்படி, தமிழக அரசு பொதுப்பணித்துறையில் 2015 / 2016 / 2017 ஆகிய ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற தகுதியான பட்டப் பொறியாளர் (Graduate Engineers) மற்றும் பட்டய பொறியாளர்களுக்கான (Diploma holders in Engineering) தொழிற்பயிற்சி அளிப்பதற்கு விண்ணங்கள் இணையதளம் மூலம் வரவேற்கப்படுகிறது.

இத்தொழிற்பயிற்சியில், சிவில் பிரிவிற்கு (Civil Engineering) 300 பட்டப் பொறியாளர்களும், எலக்ட்ரிகல் மற்றும் எலக்டரானிக்ஸ் பிரிவிற்கு (Electrical and Electronics Engineering) 15 பட்டப் பொறியாளர்களும், எலக்டரானிக்ஸ் அண்டு கம்யூனிகேஷன் (Electronics and Communication Engineering) பிரிவிற்கு 10 பட்டப் பொறியாளர்களும் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். மேலும், சிவில் பிரிவிற்கு 150 பட்டயப் பொறியாளர்களும், எலக்ட்ரிகல் மற்றும் எலக்டரானிக்ஸ் பிரிவிற்கு (Electrical and Electronics Engineering) 15 பட்டயப் பொறியாளர்களும், எலக்டரானிக்ஸ் அண்டு கம்யூனிகேஷன் (Electronics and Communication Engineering) பிரிவிற்கு 10 பட்டயப் பொறியாளர்களும் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

மாதாந்திர உதவித் தொகையாக ரூ.4984/– பட்டப் பொறியாளர்களுக்கும், ரூ.3542/– பட்டயப் பொறியாளர்களுக்கும் வழங்கப்படும்.

தகுதியான நபர்கள் **www.mhrdnats.gov.in** இணையத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பின்னர் விண்ணப்பதார்களுக்கு அளிக்கப்படும் சேர்க்கை எண் மூலம் மேற்படி தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். மேற்படி தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பம் அளிப்பதற்கான அறிவிப்பாணை மற்றும் நடைமுறைகளுக்கான விரிவான விவரங்கள் **www.boatsr-apprentice.tn.nic.in** இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**